பனூஸலமாவே! நீங்கள் உங்கள் இருப்பிடத்திலேயே இருந்து கொள்ளுங்கள் உங்களின் சுவடுகளுக்கும் நன்மை எழுதப்படும்.நீங்கள் உங்கள் இருப்பிடத்திலேயே இருந்து கொள்ளுங்கள் உங்களின் சுவடுகளுக்கும் நன்மை எழுதப்படும்.

பனூஸலமா கோத்திரத்தார் மஸ்ஜித் நபவீயின் பக்கமாக இடம் பெயர விரும்பினர்.அது
ரஸூல் (ஸல்) அவர்களுக்கு எட்டியது.அப்பொழுது நபியவர்கள் அவர்களிடம் "நீங்கள் பள்ளிவாசல் பக்கமாக இடம் பெயர விரும்புவதாக எனக்கு செய்தி கிடைத்துள்ளது" என்றார்கள்.அதற்கு அவர்கள்,அல்வாஹ்வின் தூதரே! ஆம் என்றனர்.அதற்கு நபியவர்கள் "பனூஸலமாவே! நீங்கள் உங்கள் இருப்பிடத்திலேயே இருந்து கொள்ளுங்கள் உங்களின் சுவடுகளுக்கும் நன்மை எழுதப்படும்.நீங்கள் உங்கள் இருப்பிடத்திலேயே இருந்து கொள்ளுங்கள் உங்களின் சுவடுகளுக்கும் நன்மை எழுதப்படும்" என்றார்கள்.என ஜாபிர்
(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.இன்னொரு அறிவிப்பில் "நிச்சயமாக ஒவ்வொரு எட்டுக்கும் ஒரு அந்தஸ்து உண்டு.என குறிப்பிடப்பட்டுள்ளது. [ஸஹீஹானது-சரியானது] [இது போன்று புஹாரீ அவர்களும் அறிவித்திருக்கிறார் - இதனை முஸ்லிம் பதிவு செய்துள்ளார்]

ஹதீஸ் விளக்கம்:பள்ளிவாயலை விட்டும் தூரமான இடத்தில் வாழ்ந்து வந்த பனூஸலமா கோத்திரத்தார் பள்ளிவாயலுக்குச் சமீபமான இடங்களுக்கு இடம் பெயர விரும்பினர்.ஆனால் மதீனா நகர் நிரம்பி வழிவதை நபியவர்கள் விரும்பவில்லை.மாறாக அதனை மேலும் அபிவிருத்தி செய்து அதனை விஸ்தரிப்பதன் மூலம் முனாபிகீன்களின் பார்வையிலும்,முஷ்ரிகீன்களின் பார்வையிலும் முஸ்லிம்கள் கம்பீரமாகக் காட்சியளிக்க வேண்டு மென்பதே ரஸூல் (ஸல்) அவர்களின் விரும்பமாக இருந்தது.இதனை புஹாரியின் ஒரு அறிவிப்பு உறுதி செய்கின்றது.எனவே அவர்களிடம் நபியவர்கள் "நீங்கள் பள்ளிவாயலுக்குப் பக்கத்தில் இடம் பெயரப் போவதாக எனக்கு செய்தி கிடைத்துள்ளது"என்றார்கள்.அதற்கு அவர்கள் "ஆம் அல்லாஹ்வின் தூதரே! அதனை நாம் விரும்புகிறோம்" என்றனர்.அதற்கு நபியவர்கள் நீங்கள் உங்கள் இருப்பிடங்களில் இருங்கள்.உங்களின் சுவடுகளுக்கும் நன்மை எழுதப்படும்" என்று இரண்டு தடவைகள் கூறினார்கள்.மேலும் ஒவ்வொரு எட்டுக்கும் ஒரு நன்மை,அல்லது ஒரு அந்தஸ்து உண்டென அதனை மேலும் தெளிவு படுத்தினார்கள்.மேலும்" உங்களில் எவருடைய இல்லம் தூரத்தில் இருக்கின்றதுவோ அவரின் கூலி மகத்தானது" என்று அபூஹுரைரா (ரழி) அவர்கள் கூறினார்கள்.அப்போது அவர்களிடம் அபூஹுரைராவே! அது ஏன்? என்று வினவப்பட்டது.அதற்கு அவர்கள்,அது எட்டுகள் அதிகம் என்றபடியால்,என்றார்கள்.இந்த பேறு சிறு தூரமாயினும் பெருந் தூரமாயினும் சரி வீட்டில் இருந்து சிறந்த முறையில் வுழூ செய்து கொண்டு வாகனத்திலன்றி நடந்து செல்கின்றவனுக்கே அனுகூலமாகும்.அதாவது அவன் எடுத்து வைக்கும் எட்டுக்கள் குறைந்த எட்டுக்களாயினும் அதிக எட்டுக்களாயினும் சரி ஒவ்வொரு எட்டுக்கும் இரண்டு விடயங்கள் எழுதப்படும்.ஒன்று அவனின் ஒரு பதவி உயர்த்தப்படும்,மற்றொன்று அவனின் ஒரு பாவம் அழிக்கப்படும்.மேலும் "உங்களில் ஒருவர் நல்ல முறையில் வுழூ செய்து கொண்டு தொழுகைக்காக வெளியிறங்கிச் செல்லுங்கால் அவர் தன்

[illegible]

http://sunnah.global/hadeeth/ta/show/3713